## ஒதுக்கீட்டுத் தலைப்பு 273 - புத்தளம் மாவட்ட செயலகம்

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு

### 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் செயற்படுத்துதலும்.

(ஆ) மாவட்ட செயலகமானது அரசாங்கத்தின் பிரதான ஒருங்கிணைப்பு நிறுவனமாக அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்திட்டங்களையும் அரசாங்கத்தின் கட்டளைக்கிணங்க அமுல்படுத்துதல், செயல்முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் ஒருங்கிணைத்தல் என்பன.

(இ) ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் நிறைவேற்றப்படுகின்ற நியதிக் கட்டளைச் சட்டங்களினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல்.

(ஈ) மக்களின் சட்டத்தினையும் சமாதானத்தினையும் பேணுதல், அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அரசாங்கத்தின் பாதுகாப்பு பிரிவுடன் தொடர்புகளைப் பேணுதல்.

(உ) அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்கள், அமைச்சுக்களின் மாவட்டத்திலுள்ள பிரதான முகவர் நிறுவனமாக அவர்களின் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதலும் ஒருங்கிணைத்தலும்.

(ஊ) அரசாங்கத்தின் வருமான கணக்களிதகைமை தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக அரசாங்க வருமானங்களைச் சேகரித்தல் மற்றும் கணக்கீடு செய்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

### 2. மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) வென்னப்புவ

(ஆ) நாத்தாண்டிய

(இ) சிலாபம்

(ஈ) ஆரச்சிக்கட்டுவ

(உ) புத்தளம்

(ஊ) கற்பிட்டி

(எ) வண்ணாத்திவில்லு

(ஏ) கருவலகஸ்வெவ

(ஐ) நவகத்தேகம

(ஒ) ஆனமடுவ

(ஓ) மஹகும்புக்கடவல

(ஔ) தங்கொடுவ

(க்) மாதம்பை

(க) பள்ளம

(கா) முந்தல்

(கி) மஹவெவ

## 1.3 கணக்காய்வும் கணக்காய்வின் நோக்கெல்லையும்

புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 26 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படவில்லை என்பது தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய நிதிப்பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| நட்டங்கள் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த சம்பவ அறிக்கை | நிதிப்பிரமாணம் 1646 |

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 545,934,726 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 501,927,342 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 44,007,384 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 8 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டுவருபவை | 378,500,000 | 443,734,726 | 4,563,666 | 01 |
| மூலதனம் | 102,200,000 | 102,200,000 | 39,443,718 | 39 |
| மொத்தம் | 480,700,000 | 545,934,726 | 44,007,384 | |

**(ii) பாதீட்டு முரண்கள்**

- 02 செலவின விடயங்களிற்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 50,000 நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

- 17 செலவு விடயங்களுக்கு மிகையாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவு விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாடு 10 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு கருமங்களுக்காக 22 அமைச்சுக்கள் மற்றும் 16 திணைக்களங்களிடமிருந்து முறையே ரூபா 2,635,989,690 மற்றும் ரூபா 990,567,363 அடங்கலாக ரூபா ரூபா 3,626,557,053 கூட்டுமொத்தமான

நிதி ஏற்பாடு மாவட்டச் செயலகத்திற்குக் கிடைத்திருந்தது. மாவட்டச் செயலகத்தினால் அதில் ரூபா 3,234,056,926 கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. 02 அமைச்சுக்களினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 524,000 நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்காமையால் அவ்வேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,474,241,601 தொகையிலிருந்தும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 21,773,265 தொகையிலிருந்தும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 520,103,265 தொகையிலிருந்தும் முறையே ரூபா 196,127,673 ரூபா 10,450,150 மற்றும் ரூபா 110,810,529 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள்**

27301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 50,000,000 | 46,328,899 | 25,000,000 | 54,298,105 | 190,000,000 | 141,063,856 |

27301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 3,896,236 ஆகக் காணப்பட்டதுடன் அதில் 02 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாகக் காணப்பட்ட 25 கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,297,683 ஆகக் காணப்பட்டது.

**(ஈ) பொதுவைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 265,542,126 கூட்டுத்தொகையாக இருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 ஆண்டுகளைத் தாண்டிய ரூபா 8,265,866 ஆன மாவட்டச் செயலகம் உள்ளிட்ட 13 பிரதேச செயலகங்களின் பொது வைப்புக் கணக்கு மீதி தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 215(3) இலுள்ள ஏற்பாட்டின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி மாவட்டச் செயலகத்தினால் செலவிடப்படாத செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டு ரூபா 2,866,036 தொகை பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 1.6 நல்லாளுகை மற்றும் கணக்களிப்பொறுப்பு

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பின்னர் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்படவேண்டிய போதிலும்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிராகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டினுள் 12 பிரதேச செயலகங்களிற்கு 12 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், 04 பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகம் தொடர்பில் எவ்வித உள்ளகக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வில் வெளிப்பட்டிருந்த குறைபாடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை சரிசெய்வதற்கும் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட பின்தொடர் நிலைமைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபையினை செயற்படுத்தல்

மீளாய்வாண்டின் போது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற சொத்துக்கள்

மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான 02 கட்டிடங்கள், 05 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

## 1.8 இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிதிப் பிரமாணம் | | |
| | நி.பி 104 (1) | - | 2 வாகனங்களிற்கு ஏற்பட்டிருந்த நட்டம் மதிப்பிடப்பட்டு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நி.பி 880 | - | ஊழியர் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | | |
| | 2007 ஒக்தோபர் 05 ஆந் திகதிய பொ.நிர்/க/1/5.வ ஆம் இலக்க சுற்றறிக்கை | - | ஓய்வூதியம் செலுத்துகையில் உயிர்வாழ் தகைமை உறுதிப்படுத்துதல் தொடர்பான தகவல்கள் பெறப்பட வேண்டிய போதிலும், தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் முறையற்ற தன்மை காணப்பட்டது. |
| (இ) | அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | | |
| | 2008 மார்ச் 13 ஆந் திகதிய PF-427 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | வாகனமொன்று காப்புறுதி செய்யப் பட்டிருக்கவில்லை. |

(ஈ) ஏனைய சுற்றறிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| (i) | 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய பொஅ/அபி/ கிராம எழுச்சி ஒட்டு மொத்த மேற்பார்வை/ 2012 ஆம் இலக்க கடிதத்தின் 03 ஆம் பந்தி | 10,000,000 | வீதி அபிவிருத்தி மற்றும் சிற்றளவு கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டங் களிற்குரிய பயிற்சியளிக்கப்படாத ஊழியத் திற்காக மக்கள் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2003 செப்தெம்பர் 25 ஆந் திகதிய ஓய்வுதியப் பணிப்பா ளரின் கடிதம் | 151,348 | சிலாபம் பிரதேச செயலகத்தினால் 2012 ஆம் ஆண்டில் 07 சந்தர்ப்பங்களில் ஓய்வூதியம் பெறுவோர் மரணித்ததன் பின்னர் அவர்களிற்குரிய ஓய்வூதியங்கள் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், அப்பணம் தொடர்பில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டங்களை முடிவுறுத்தாது கைவிடப்படுதல் மற்றும் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பிலான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

மாவட்டச் செயலகத்தினால் ரூபா 1,238,367 மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட வீதியொன்றை கொங்ரீட் செய்யும் செயற்திட்டம் 2012 திசெம்பர் 12 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வீதியின் நீர்வழங்கல் செயற்திட்டத்திற்குரிய குளாய்களை வைத்தல் முடிவுறும் வரை ஆரம்பிக்கப்பட முடியாதிருந்தமையால் அதனைச் செயற்படுத்துவதற்கு ஒப்பந்தகாரர் ஒருவர் முன்வந்திருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டங்களை ஆண்டில் முடிவுறுத்தப்பட முடியாது போயிருந்தது.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் (மக்கள் பங்களிப்புடன்) | ஆரம்பிக்கப் பட்ட திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| அளுத்வெவ புனர்நிர்மாணம் | 1,215,729 | 2012.09.05 | 600,745 | கமத்தொழில் திணைக்களத்தினால் மதிப்பீட்டைத் தயாரிப்பதில் தாமதம் மற்றும் சீரற்ற காலநிலை |
| குடிநீர் செயற்திட்டம்-வெலிபெலஸ்ஸ | 1,200,000 | 2012.12.17 | 590,352 | காணிச் சுவீகரிப்பு தாமதமடைதல் மற்றும் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை |
| கும்புக்வெவ நீர்த் தாங்கி நிர்மாணம் | 11,030,274 | 2012.12.13 | 38,105 | ஆண்டின் இறுதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமையால் காலம் போதியதாக இல்லாமை |
| வடவத்த நாய்க்குளம் கிராம நீர் வழங்கல் (நீர்த் தாங்கி) | 615,695 | 2012.11.21 | -- | சீரற்ற காலநிலை |
| பெனில் மாவத வீதியின் எஞ்சிய பகுதியை புனரமைத்தல் மற்றும் மதகு நிர்மாணம் | 1,000,000 | 2012.12.10 | --- | சீரற்ற காலநிலை |
| மரத வீதியை புனரமைத்தல் | 1,207,816 | 2012.6.18 | 556,043 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமை |

| | | | | |
|---|---|---|---|---|
| கராஜ் மாவத்தையை புனரமைத்தல் | 1,159,749 | 2012.7.20 | 6,894 | -மேற்படி- |
| கௌரவ ஆதர் மாடின் ஆண்டகை வீதியின் இரண்டாம் கட்டப் புனரமைப்பு | 619,637 | 2012.7.27 | 74,922 | |
| பங்கட சந்தியின் புனித மரியால் வீதி புனரமைப்பு | 1,217,824 | 2012.11.15 | 840,304 | |
| எரபதுகஹவத்த வீதியை புனரமைத்தல் | 1,207,816 | 2012.11.18 | -- | |
| மயான வீதியைப் புனரமைத்தல் | 1,207,816 | 2012.11.28 | 936,132 | |
| கடுகொட வெல வீதியைப் புனரமைத்தல் | 1,208,724 | 2012.07.19 | -- | |
| லூட்ஸ் மாவத்தை புனரமைப்பு | 1,210,887 | 2012.08.02 | 934,940 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமை |
| தல்கஹகடுவ வீதிக்கு தாரிடுதல் | 606,790 | 2012.10.30 | 546,111 | |
| பன்சல் குடியிருப்பு வீதியை புனரமைத்தல் | 1,101,011 | 2012.07.06 | 932,786 | |
| நீர் வழிந்தோடும் கழிவோடை முறைமையினை அபிவிருத்தி செய்தல் (துன்மோதர) | 1,255,633 | 2012.11.14 | 36,223 | |
| இஹல கொட்டராமுல்ல அல்-ஹிரா மாவத்தை அபிவிருத்தி | 1,154,584 | 2012.06.25 | 112,889 | |

| | | | | |
|---|---|---|---|---|
| மிட்லன்ட் வீதியை அபிவிருத்தி செய்தல் | 1,023,138 | 2012.10.15 | 781,681 | |
| தின்எல்ல வீதியை அபிவிருத்தி செய்தல் | 1,085,158 | 2012.11.16 | 781,681 | |
| நாரவில பாடசாலைக்கு அருகாமையிலிருந்து குந்தெடியாவ விகாரை வரையிலுமான வீதிக்கு தாரிடுதல் | 1,090,319 | 2012.11.12 | 654,600 | |
| மகப்பேற்று குழந்தைகள் சிகிச்சைக் கட்டிட அபிவிருத்தி | 1,084,241 | 2012.10.10 | 163,134 | |
| மிரிஸ்ஸ காட்டு வீதியினை அபிவிருத்தி செய்தல் | 1,140,314 | 2012.12.03 | 36,469 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமை |
| மாவில வத்த 1 குறுக்குத் தெருவினை புனரமைத்தல் | 1,139,052 | 2012.12.27 | -- | |
| நாரவில முற்பள்ளியினை அபிவிருத்தி செய்தல் | 1,109,000 | 2012.11.19 | 54,770 | |
| அன்தெனியவத்த குடியிருப்பிலுள்ள சிறிய மற்றும் பாரம்பரிய நிலையத்தை மேம்படுத்தல் | 1,139,399 | 2012.07.07 | 860,027 | |

## 1.10 வங்கிக் கணக்கு செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

### செம்மையாக்கப்பட வேண்டிய மீதி

புத்தளம் மாவட்ட செயலகத்தினால் 2012 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த செம்மையாக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 42,375 பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பில் நி.பி. 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளான முறையே ரூபா 6,213 மற்றும் ரூபா 37,828 இனை கணக்கீடு செய்வதற்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.11 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

### அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(i) 2012 ஆம் ஆண்டின் போது கருவலகஸ்வெவ பிரதேச செயலகத்தினால் ஓட்டத்தில் விடப்பட்டிருந்த 02 வாகனங்களிற்காக எரிபொருள் கட்டளைகளைப் பயன்படுத்தாது ரூபா 50,691 இற்கு எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(ii) நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் அணைக்கட்டு பாதுகாப்புச் செயற்திட்டத்தின் ஊடாக தப்போவ குடி நீர் வழங்கல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கருவலகஸ்வெவ பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் ரூபா 1,936,347 செலவிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக மாவட்டச் செயலாளரின் முறைப்படியான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.12 மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

மஹகும்புக்கடவல மற்றும் கருவலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள பாபடசாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 113,525 தொகை செலவிலப்பட்டதாக கொடுப்பனவு அறிக்கைகளில் போலியான தகவல்களை உள்ளடக்கி நிறைவேற்றப்படாத வேலைகளிற்காக பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 1.13 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2012 ஆம் ஆண்டில் கருவலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக நிதி ஏற்பாடாக கிடைத்திருந்த ரூபா 1,000,000 தொகையிலிருந்து ரூபா 102,809 தொகை சேமிக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் உரிய நடவடிக்கையினை பூரணப்படுத்த முடியாது போயிருந்தது.

## 1.14 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தங்கொடுவ பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட முதலீட்டுத் நிதியின் மூலம் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கிரிமெடியான கழிமண் கைத்தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 250,000 பயனற்ற செலவினமாகியிருந்தது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற ‘‘ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை’’ செயற்திட்டத்தின் கீழ் நாத்தான்டிய பிரதேச செயலகத்தினால் மானிங்கல குடிநீர் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் ரூபா 675,456 செலவில் கிணறு மற்றும் நீர் நிரப்பும் நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டில் ரூபா 939,000 செலவில் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் 2012 யூன் 13 ஆந் திகதி நீர் நிலைகளிலுள்ள நீர் குடிநீராகப் பயன்படுத்தவதற்குப் பொருத்தமற்றது என பரிந்துரை செய்யப்பட்டிருந்தமையால் அதற்காகச் செய்யப்பட்டிருந்த ரூபா 1,614,456 செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது.

(இ) நாத்தான்டிய பிரதேச செயலகத்தினால், 2012 இன் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிதியின் மூலம் மாரவில வடக்கு முதுகடுவ பெண்கள் அமைப்பிற்கு சுயதொழிலிற்காக சுழற்சி நிதியம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக ரூபா 50,000 செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 பெப்ரவரி 06 ஆந் திகதி வரை சுழற்சி நிதியம் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், 2013 சனவரி 16 ஆந் திகதி அத் தொகையிலிருந்து ரூபா 40,000 சங்கத்தின் பொருளாலரால் வங்கியிலிருந்து எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2012 இன் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிதியின் மூலமும் கமநெகும செயற்திட்டத்தின் மூலமும் கற்பிட்டி, பல்லம மற்றும் மஹகும்புக்கடவல பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி வேலைகளிற்காக ரூபா 636,322 மொத்தப் பெறுமதி கொண்ட பொருட்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன. 2013 மார்ச் வரை அந்தப் பொருட்களும் உபகரணங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டின் கம நெகும செயற்திட்டத்தின் கீழ் நவகத்தேகம, மஹகும்புக்கடவல மற்றும் கல்பிடிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வேலைகளின் பரிசோதனையில் ரூபா 2,087,641 பெறுமதியான 02 செயற்திட்டங்களின் மேற்பார்வையில் குறைபாடுகள் காணப்பட்டன. அவ்வாறே 12 செயற்திட்டங்களின் நிறைவேற்றப்படாத செயற்பாடுகளிற்காக ரூபா 510,511 செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மாதம்பை பிரதேச செயலகத்தினால் 28 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிற்கு மாதாந்த ஓய்வூதியமாக ரூபா 687,101 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு மிகையாகச் செலுத்தப்பட்ட தொகையை 2012 செப்தெம்பர் முதல் தவணைப்பணமாக அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான விபரங்கள் ஓய்வூதியக் கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஓய்வூதியமாக ரூபா 94,778 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்த ஒரு ஓய்வூதியம் பெறுவோரின் கோவை 2013 சனவரி மாதத்தில் பிங்கிரிய பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், மிகையாகச் செலுத்தப்பட்டிருந்த தொகையிலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள தொகை தொடர்பான விபரங்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே, கற்பிட்டி, பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இரண்டு ஓய்வூதியம் பெறுவோர் மரணித்த பின்னரும் 08 மாதங்களிற்காக ரூபா 125,225 ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) ஆரச்சிகட்டுவ பிரதேச செயலகத்திற்கு பெண்கள் அமைப்பிற்கு அங்கத்தவர்களின் பொருளாதார நிலமையினை உயர்த்துவதற்காக சுழற்சி நிதியமொன்றை ஆரம்பிப்பதற்கு இலங்கை பெண்கள் பணியகத்தினால் 1996 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 180,000 நிதி விளைவற்றுக் காணப்பட்டது. 2013 மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைக்காக அதற்குரிய

ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2005 ஆம் ஆண்டில் சுழற்சி நிதியமொன்றை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 200,000 நிதியிலிருந்து ரூபா 67,100 தொகை 2008 மே 15 ஆந் திகதி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் 2013 ஏப்ரல் வரை அக்கணக்கு விளைவற்றுக் காணப்பட்டதுடன், அங்கத்தவர்களிற்கு கடனாக வழங்கப்பட்டிருந்த எஞ்சிய ரூபா 132,900 தொகை அத்திகதியில் விளைவற்றுக் காணப்பட்டது.

## 1.15 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 55 | 43 | 12 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 34 | 15 | 19 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 998 | 761 | 237 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 172 | 160 | 12 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 07 | - | 07 |
| (vi) | பயிலுனர் பட்டதாரிகள் | 1,387 | 1,228 | 159 | - |
| | மொத்தம் | 2,646 | 2,214 | 439 | 07 |